# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,058 — 1919 ம் ஆண்டு ஐப்பசிமீ 17 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV.— நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

1916 ம் வருஷத்தின் 15 ம் இலக்கச் சட்டத்தின் 9 ம் பிரிவினால் திருத்தப்பட்டபடியான 1896 ம் வருஷத்தின் 20 ம் இலக்கச்சட்டத்தின் 30 (2A) ம் பிரிவின்படி நுவரஎலியா சீர்திருத்தற் சபையால் உண்டாக்கப்பட்டு அதிகார மந்திர சபையாரின் ஆலோசனையோடு உத்தமனார் தேசாதிபதி அவர்களால் பெலப்பிக்கப்பட்ட ஆணைப்பிரமாணம்.

உத்தமனார் கட்டளைப்படி,
ஏ. எஸ். பெடன்,
அக்றிங் கலோனியல் சக்கிறுத்தார்.

கொழும்பு, கொலோனியல் சகிறுத்தார் கந்தோர்,
1919 ம் ஆண்டு ஐப்பசிமீ 13 ந் உ.

#### குறிக்கப்பட்ட திருத்தங்கள்.

சீர்திருத்தல் சபையுடைய எல்லைக்குள் றேட்டில் நின்று எவ்வித கூட்டத்துக்கும் போதிக்க அல்லது பிரசங்கம் செய்ய அல்லது கூட்டம்கூட விரும்புவோர் சீர்திருத்தல் சபையின் அக்கிராசனாதிபதியிடம் உத்தரவுபெற்று அவ்வுத்தரவு பத்திரத்தில் காட்டிய நேரத்திலும் அதில்சொல்லப்பட்ட எல்லைக்குள்ளேயும் அல்லாமல் போதிக்க அல்லது பிரசங்கம் செய்ய அல்லது கூட்டம்கூடப்படாது.

---

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலககச் சட்டத்ினது 7 ம் பிரிவின் பிரகாரம் பெப்பிலியாவலை ஆண்பள்ளிக்கூடத்திற் குப்போகும் தெருவுக்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 4. குறிச்சி—ஒவிற்றிகம.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | இம்புலகேனே .. | தென்னந்தோட்டம் .. | எம். டன் கென்டிறிக் .. | 0 0 9 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிககு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1919 ம் ஆண்டு (நவம்பர்) கார்த்திகை மாசம் 17 ந் தேதியிலன்று பிற்பகல் 1 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

ஜே. ஜீ. பிறேசர்,
அரசாட்சி ஏசண்டு.

கொழும்புக கச்சேரி,
1919 ம் ஆண்டு ஐப்பசிமீ 14 ந் உ.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கல்கிஸ்சாவில் ஓர் பிரசித்த கக்கூசு கட்டுகிறதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 17,026. குறிச்சி—கல்கிஸ்சா.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கல்கிஸ்சாவத்தை .. | 2 தென்னமரங்கள் உள்ளது .. | இ. எல். எவ். டி சொய்சா .. | 0 1 4·19 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1919 ம் ௵ (நவம்பர்) கார்த்திகை மாதம் 17 ந் தேதியிலன்று மத்தியானம் 12 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1919 ம் ௵ ஐப்பசி௴ 14 ந் ௳.

ஜே. ஜீ. பிறேசர்,
அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் துறைமுகத்தின் றையில் வேலைக்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 17,041. குறிச்சி—வேறகொட.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | வேறகொட .. | புல்லு நிலம் .. | சி. இ. தலையறெத்தின .. | 0 2 15·83 |
| 2 | மடுல்லாவத்தை .. | ஷை .. | யொன் பீறிஸ் .. | 0 0 25·81 |
| 3 | ஷை .. | ஷை .. | என். எ. பெறயிரு .. | 0 0 0·50 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1919 ம் ௵ (நவம்பர்) கார்த்திகைமாசம் 17 ந் தேதியிலன்று முற்பகல் 11·30 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1919 ம் ௵ ஐப்பசி௴ 14 ந் ௳.

ஜே. ஜி. பிறேசர்,
அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கிரிபிற்றிய கிராமத்தின் முகமதியருடைய சவக்காலைக்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 17,016. குறிச்சி—கிரிபிற்றிய.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | மில்லகாலந்த .. | துப்பரவாக்கப்பட்ட நிலம் .. | விக்கிறமபெதிகே ஒவியாவும் மறுபேரும் | 0 3 06·6 |
| 2 | கெற்றகெலகாவத்தை | தென்னந்தோட்டம் .. | ஷை வயிவா ஷை | 0 0 35 |
| 3 | மில்லகாலந்த .. | துப்பரவாக்கப்பட்ட நிலம் .. | ஷை ஒவியாவும் ஷை | 0 0 03·7 |
| 4 | கெற்றகெலகாவத்தை | தோட்டம் .. | ஷை வுயுவாவும் ஷை | 0 0 10·1 |

எடுத்துக் கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1919 ம் ௵ (நவம்பர்) கார்த்திகைமாசம் 17 ந் தேதியிலன்று பிற்பகல் 12·30 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1919 ம் ௵ ஐப்பசி௴ 14 ந் ௳.

ஜே. ஜி. பிறேசர்,
அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நாவலப்பிட்டியில் மலம்கொட்டுமிடத்திற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 6,984. குறிச்சி—வெளவுகாமம்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர் | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கெங்காகெதரத்தோட்டம் .. | தேயிலையும் சொந்தப்பாவிப்புக்குமான ரேட்டும் | தலவாக்கொல்லையிலிருக்கும் சிவசாமிக் கங்காணி | 1 0 0·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1919 ம் ௵ நவம்பர்மாசம் 18 ந் தேதியிலன்று மத்தியானம் 12 மணிக்கு நாவலப்பிட்டியிலிருக்கும் சுகாதார சங்கக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1919 ம் ௵ ஒக்ரோபர்௴ 17 ந் ௳.

சீ. எஸ். வோகன்,
மத்திய மாகாண அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தின் 7 ம் பிரிவின் பிரகாரம் தெவுந்தற லைட் ஹவுஸ் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 11,264. குறிச்சி—தெவுந்தற.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | உபாஸகயகேவத்த .. | — .. | தெவுந்தறயில் குடியிருக்கும் ஜி. எம். ஜயசிங்கயும் மற்றவர்களும் | 0 0 4·15 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஷப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1919 ம் ௵ கார்த்திகைமாசம் 24 ௳ தேதியிலன்று காலை 10 மணிக்கு மாத்துறை கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியினுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்துறைக் கச்சேரி,
1919 ம் ௵ ஐப்பசி௴ 8 ௳.

ஜே. டீ. பிறவுன்,
அரசாட்சி உதவி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பள்ளிக்கூடமொன்று கட்டுகிறதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 127. குறிச்சி—கொம்பத்தள.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 24 | மதெகொட .. | சேனை .. | கொம்பத்தளயில் குடியிருக்கும் வியகெயி சிஞ்ஞோவும் மற்றவர்களும் .. .. | 0 2 10 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதினால், அக்காணியை ஆட்சிஷப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1919 ம் ௵ கார்த்திகை௴ 20 ௳ தேதியிலன்று 11 மணிக்கு கப்புறுபிட்டி தானயத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியினுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்துறை கச்சேரி,
1919 ம் ௵ ஐப்பசி௴ 8 ௳.

ஜே. டி. பிறவுன்,
அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கொளம்புகம சுயபாஷை ஆண்பாடசாலை என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 2,779. குறிச்சி—நவதுங்கோறளை, கொளும்புகம.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 3 | படஹலகேவத்த .. | சேனை .. | கொடகம்காணங்கே டொன் பஸ்தியான் அப்புஹாமியும் சிலரும் .. .. .. | 0 0 14·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஷப்புக்கொள்ள அரசாட்சிதார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டியபிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1919 ம் ௵ கார்த்திகை௴ 14 ௳ தேதியிலன்று மாலை 1 மணிக்கு றட்டினப்புரி கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியினுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினப்புரிக் கச்சேரி,
1919 ம் ௵ ஐப்பசி௴ 11 ௳.

ஈ. பி. எலக்சாண்டர்,
அரசாட்சி ஏசண்டு.

---

## காணி அளவையைப்பற்றிய அறிவித்தல்.

வடமேல் மாகாணத்தில் முடிக்குரிய காணிகளை வாங்க அல்லது குத்தகையாக வெடுக்கப்படும் கேள்விப்பத்திரங்களைப்பற்றி காணியளவு இதன்பிறகு, இதன்கீழ் சொல்லப்படுமாறு ஒவ்வொரு பிரிவின்படிக்கு வெவ்வேறாய் நடத்தப்படும்.

2. மாகாணத்தை இவ்விதமாய்ப் பிரிவுபண்ணப்பட்டிருக்கிறது—

பிரிவு இலக்கம் 1.—குருநாக்கல் டிஸ்திறிக்கைச்சேர்ந்த காணிகள்.
பிரிவு இலக்கம் 2.—சிலாபம் டிஸ்திறிக்கைச்சேர்ந்த காணிகள்.
பிரிவு இலக்கம் 3.—புத்தளம் டிஸ்திறிக்கைச்சேர்ந்த காணிகள்.

3. 1919 ம் ௵ மார்களி௴ 1 ௳ திகதியிலிருந்து 3 ம் இலக்கங்கொண்ட பிரிவை மூடப்படும். அத்தேதியின் பிறகு இப்பிரிவுககுட்பட்ட காணிகளைப்பற்றிக் கேள்விப்பத்திரங்கள் சர்வேயர் ஜெனறல்துரை யவர்களுக்கு அனுப்பப்படமாட்டாது. ஆனாலும், இப்பிரிவுக்குட்பட்ட காணிகளிலேதும் விற்கிறதற்குத் தடையிருக்கிறதா வென்று அறியும் பொருட்டு கேள்விககாரர்கள் பதிவுபண்ணிவைககும்படி கேள்விப்பத்திரங்கள் நமக்கனுப்பலாம்.

4. அதன்பிறகு 1 ம் இலக்கங்கொண்ட பிரிவை மூடப்படும். அதன்பிற்கு 2 ம் இலக்கங்கொண்ட பிரிவை மூடப்படும். இவ்விரண்டு டிஸ்திரிக்குகளிலிருக்கும் முடிக்குரிய காணிகளைக் கேட்டுப் போடப்படுங் கேள்விப்பத்திரங்கள் கூடிய சீக்கிரத்தில் அனுப்பவேண்டும். முதலாம் இலக்கங்கொண்ட பிரிவுக்குட்பட்ட காணிகளுககுக் கேள்விப்பத்திரங்கள் குருநாக்கல் ஏசன்றர் துரையவர்களுக கனுப்பவும், 2 ம் இலக்கங்கொண்ட பிரிவுக்குட்பட்ட காணிகளுக்குக் கேள்விப்பத்திரங்கள் நமக்கனுப்பவும் வேண்டும்.

5. 1 ம் பிரிவை மூடப்படுந் தேதியைச் சுறுக்கில் பிரசித்தப்படுத்துவோம். அத்தேதி 3 ம் பிரிவுக்குட்பட்ட எல்லா வேலைகளும் முடிவாகிய திகதிகளுக்குச் சமனுகும்.

எஸ். எம். பி. வேந்தர்கோன்,
புத்தளம் சலாப டிஸ்திறிக்குகளின் உதவி,
அரசாட்சி ஏசன்றுத்துரையவர்களுக்காக.

புத்தளம் கச்சேரியில்,
1919 ம் ஸ்ரீ ஐப்பசிமீ 11 ந் உ.

## 1912 ம் ஆண்டின் 8 ம் இலக்கச்சட்டத்தின்கீழ் அறிவித்தல.

1920–21 ம் வருஷத்துக்கு கள்ளுத் தவறணைகளைப் பற்றி ஊர்ச்சனங்களின் சம்மதம் அறிவதைக்குறித்த விளம்பரம்.

மத்திய மாகாணம் மாத்தளை டிஸ்திறிக் உதவி ஏசன்றுத்துரையவர்கள் 1919 ம் ஆண்டு பங்குனிமாதம் 12 ந் திகதியையும், 87 ம் இலக்கத்தையுங்கொண்ட குடிவகை விளம்பர பிரமாணங்களின் 5 ம் பிரமாணத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு தவறணைகளிருக்கும் பத்துகளில் வசிக்கும் குடிசனங்களில் தலைவரிப்பணம் கொடுப்பவர்களுள் 100–க்கு 75 பெயர் அந்தத் தவறணைகள் இருக்கிற இடங்களில் இருப்பதற்கு மாறுவென்று அறிவதற்கு பின்சொல்லப்படும் திகதிகளையும் இடங்களையும் நியமனம்செய்திருக்கிருரென்று இத்தால் சகலரும் அறிய வேண்டியது.

1. உடாஸ்கிரிய அம்பன்பொல என்னுமிடங்களிலுள்ளவர்களிடத்தில் உடாஸ்கிரியா கள்ளுத்தவறணையைப்பற்றி அறிய யட்டாவத்தை கமான் வங்களாவில் 1919 ம் ஆண்டு கார்த்திகைமீ 11 ந் திகதி பின்னேரம் 1 மணிக்கும் 4.30 மணிக்கிடையிலும்.

2. வேரகம என்னுமிடத்திலுள்ள வாகறிடத்தில் வேரகம, கள்ளுத் தவறணையைப்பற்றி யறிய வேரகம வீரக்கூன் கந்த பணமடுவவில் 1919 ம் ஆண்டு கார்த்திகைமீ 13 ந் திகதி பின்னேரம் 1 மணிக்கும் 4.30 மணிக்கிடையில்.

ஈ. றீ. மிலிங்டன்,
உதவி அரசாட்சி ஏசன்று.

மாத்தளைக் கச்சேரி,
1919 ம் ஸ்ரீ ஐப்பசிமீ 3 ந் உ.

## சவுக்கிய சீர்திருத்தச் சங்கத்துக்கு தொழிலுக்குட்படாத அங்கத்தவர்களைத் தெரிவுசெய்தல.

1898 ம் ஆண்டு 13 ம் இலக்க சுகாதார நகரசங்க கட்டளைச்சட்டம் 1916 ம் ஆண்டின் 27 ம் இலக்க கட்டளைச்சட்டத்தின் 9 ம் பிரிவால் திருத்தப்பட்டபடி மாத்துறை சுகாதார சங்கத்திற்கு அரசாட்சி உத்தியோகத்திலில்லாத மூன்று சங்கத்தவரை கீழ் காணும் 3 பிரித்தல்படி 1920—1921 வரையிலும் இரண்டு வருஷத்திற்கு தெரிவுசெய்வதற்கு ஓர் கூட்டம் 1919 ம் ஆண்டு மார்கழிமீ 1 ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு மாத்துறை கச்சேரியில் வைக்க ஆலோசித்திருப்பதை இத்தால் பிரசித்த விளம்பரம் பண்ணுகிறேன்.

(1) வடக்குப்பிரிவு. (2) தெற்குப்பிரிவு.
(3) மேற்குப்பிரிவு.

வோற்றுக் கொடுக்கத் தகுந்தவர்களென்று டாப்பிலே காணப்பட்டும் குறைந்த கணக்குக்கு இரண்டு பெயர்களாய் சம்மதம் கொடுக்கப்பட்டவராயும் எழுத்திலே தெரிவுபண்ணப்படும் ஆளாக கொடுக்கப்படாதவரும் லோக்கல்போட் சங்க மெம்பராக தெரிவுசெய்யப்படுகிறதற்கு உரித்தாகமாட்டார். தெரிவுக்கு குறிக்கப்பட்ட திகதியிலிருந்து பத்துநாளைக்கு முன் அதாவது 1919 ம் ஆணடு கார்த்திகைமாதம் 21 ந் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன் மாத்துறை லோக்கல் போட் கந்தோரில் தெரிவுப்பத்திரம் கொடுக்கப்படவேண்டும்.

ஜே. டீ. பிறவுன்,
உப கவண்மேந்து ஏசண்டு.

மாத்துறைக் கச்சேரி,
1919 ம் ஸ்ரீ ஐப்பசிமீ 1 ந் தேதி.

## தொழிலுக்குட்படாதவரின் அறிவித்தல்.

அழுக்குறுக்கோறளை முகம்பத்துவை நாகொடையில் குடியிருக்கும் கெற்றிகே டொன் பிரன்சீஸ் சமரனுயக ஆகிய நான் 1907 ம் ஆண்டின் 1 ம் இலக்கக் கட்டளைச்சட்டப்படி 1 B அட்டவணையின் 2 ம் பிரமாணத்தின் பிரகாரம் கண்டி டிஸ்திரிக்கில் சிங்கள பாஷையில் நொத்தாரிஸ் உத்தியோகம்நடத்த, பதிவுகாரியகத்தர் அவர்களுக்கு இதறகு மூன்று மாதங்களின்பின் மனுப்பண்ண எண்ணியிருக்கிறேன் என்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

1919 ம் ஆண்டு புரட்டாதிமீ 30 ந் உ.

எச். டீ. அப். சமறநாயக.

H. R. COTTLE, ACTING GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.